[1973 ஆகஸ்ட் 4

*6 வினா—**திரு. தி. சி. ஆ. சிவப்பிரகாசம்:** மாண்புமிகு கல்வி-சுற்றுலாத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், தென் பகுதிக் கல்விப் பிரிவில் தற்போது முதுநிலை பயிற்சி பெற்று இளநிலைப் பதவியிலுள்ள ஆசிரியர்கள் எத்தனை பேர்?

(இ) இவர்களுக்கு எப்பொழுது முதுநிலைப் பதவிகள் கொடுக்கப்படும்?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) 160 பேர்.

(இ) 1973-74-ல் கொடுக்கப்படும்.

திரு. தி. சி. ஆ. சிவப்பிரகாசம்: தலைவர் அவர்களே, எந்த அடிப்படையில் இவர்களுக்கு முதுநிலைப் பதவிகள் அளிக்கப்படுகின்றன? இந்த ஆண்டு எத்தனை பேர்களுக்கு இந்தப் பதவிகள் கிடைக்கும் என்று அமைச்சர் அவர்கள் சொல்வார்களா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, முந்திய கேள்விக்கு விடையிறுக்கும்பொழுது இது வரையில் 1967-லிருந்து சென்ற ஆண்டு வரையில் 24,500 பேர்களுக்கு இந்தப் பதவி உயர்வு கொடுக்கப்பட்டிருக்கிறது என்று கூறினேன். அதே மாதிரி இந்த ஆண்டு 5,000 பேர்கள் வரையில் நிதிநிலை அறிக்கையில் 5,000 செகண்டரி கிரேடு ஆசிரியர்களுக்கு உரிய சம்பளம் தரப்படும் என்று கூறப்பட்டிருக்கிறது. அந்த வகையில் 160 பேர்களுக்கு திருநெல்வேலி தென் பகுதியில் 160 இடைநிலை ஆசிரியர் பயிற்சி பெற்றவர்களுக்கு அளிக்கப்படும். உதவி பெறும் பள்ளிகளில் 130 பேர்களும், ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளில் 30 பேர்களும் இருக்கிறார்கள். அவர்களுக்கும் 1973-74-ல் பதவி உயர்வு தரப்படும்.

திரு. கோ. இளங்கோவன்: இளநிலை ஆசிரியர்கள் பயிற்சி பள்ளிக்குத் தமிழக அரசு முற்றுப்புள்ளி வைத்ததுபோல் இளநிலை ஆசிரியர்கள் பதவிக்கும் முற்றுப்புள்ளி வைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: அப்படிப்பட்ட பயிற்சிக்குத்தான் முற்றுப்புள்ளி வைக்க முடியும். ஏற்கெனவே பயிற்சிபெற்று வெளியே இருப்பவர்கள் அனைவருக்கும் வேலை

1973 ஆகஸ்ட் 4]

கொடுத்துத் தீர்க்கும் வரையில் அந்தப் பதவிக்கு முற்றுப்புள்ளி வைக்க முடியாது. இளநிலைப் பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் வெளியே இருக்கிறார்கள். அவர்களுக்கு முதல் இடம் கொடுக்க வேண்டும். அப்படிப்பட்ட பயிற்சி பெற்றவர்கள் வெளியே இல்லை என்ற நிலை ஏற்பட வேண்டும். எம்ப்ளாய்மெண்டு எக்ஸ்சேஞ்ச் மூலம் அப்படிப்பட்ட பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் இல்லை என்று தெரிந்துகொண்ட பிறகுதான் செகண்டரி கிரேடு ஆசிரியர்களை அனுமதி பெற்று வைக்கலாம் என்று கூறப்பட்டிருக்கிறது. அவர்கள் அத்துணை பேர்களுக்கும் வேலை வாய்ப்புத் தேடிக் கொடுக்கும் வரையில் அவர்கள் பதவிக்கு முற்றுப்புள்ளி வைப்பதற்கு இயலாது.

திரு. சோ. அழகர்சாமி : தலைவர் அவர்களே, செகண்டரி கிரேடு பயிற்சி பெற்றவர்கள் ஹையர் கிரேடு போஸ்டுகளில் வேலை பார்க்கிறவர்கள் இருக்கிறார்களா? அப்படியானால் எத்துணை பேர்கள்? அவர்களுக்கு செகண்டரி கிரேடு ஆசிரியர்களின் சம்பளம் கொடுப்பதற்கு அரசு முயற்சிக்குமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, ஹையர் கிரேடு பதவிகளில் செகண்டரி கிரேடு பயிற்சி பெற்றவர்கள் பல பேர்கள் இருந்து வருகிறார்கள். அப்படிப்பட்டவர்களுக்கு சென்ற 6 ஆண்டுக் காலத்தில் 24,500 பேர்களுக்குப் பதவி உயர்வு கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்த ஆண்டு 5,000 பேர்களுக்கு அந்தப் பதவி கொடுக்கப்படும். மேற்கொண்டு அப்படிப்பட்டவர்கள் 3,000 பேர்கள் இருக்கக்கூடும் என்ற கணக்கு இருக்கிறது. அடுத்த ஆண்டு பயிற்சி பெற்று மேற்கொண்டு வருபவர்கள் மேலும் பணி புரிகிற அளவுக்கு அவ்வப்பொழுது தருகிற சூழ்நிலை ஏற்படும். இப்பொழுது இளநிலைப் பயிற்சி பெற்றவர்கள் தங்களுடைய படிப்பின் தரத்தை உயர்த்திக் கொண்டு செகண்டரி கிரேடு தரத்திற்கு வந்து சேருகிறார்கள். அப்படிப்பட்டவர்களுக்கும் பதவி உயர்வு தர வேண்டிவரும். ஆக, இன்னொரு 3,000 பேர்கள் இருக்கக் கூடும் என்று உத்தேசமாகக் கூறலாம்.

THIRU B. VENKATASWAMY : Sir, according to the answer given by the Hon. Minister for Education 24,000 teachers have been promoted as Secondary Grade Teachers. Last year only,

they have promoted the apprentices and for those who have been appointed no new vacancies have been created. This year also no new vacancies have been created in any Panchayats in Tamil Nadu. As Chairman of the Panchayat Union, I want to know from the Government, while appointing these apprentices whether this Government will come forward to create new posts separately so as to absorb them in such posts?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, புதிய பதவிகள் வருகிறபொழுது ஏற்கெனவே பழகு பயிற்சி பெற்றவர்களுக்குத் தான் அந்த இடத்தை தரவேண்டும். அப்ரெண்டிஸ்களாக இருப்பவர்களுக்கு அந்த இடங்களைத் தர வேண்டும். ஏற்கெனவே வேலை பார்த்துக்கொண்டிருக்கிற இளநிலை ஆசிரியர் பதவிகளில் செகண்டரி கிரேடு பயிற்சி பெற்றவர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு செகண்டரி கிரேடு சம்பளம் தருகிறோம். அப்படித் தருவது புதிய பதவி ஆகாது, புதிய பதவிகள் என்று வருகிறபொழுது அப்ரென்டிஸ்களாக இருப்பவர் களுக்கு முதல் இடம் தந்துவிட்டு, அதற்கு மேல் காலியாக இருக்கும் இடங்களுக்கு புதியதாக வருபவர்களை நாம் சேர்த்துக் கொள்கிறோம்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : செகண்டரி கிரேடு பயிற்சி பெற்றவர்களில் பலர் 30 வயது தாண்டியவர்கள் இருக்கிறார்கள். பலர் 30 வயதை எட்டிக்கொண்டிருக்கிற நிலைமையில் இருக் கிறார்கள். அவர்கள் வேலை இழக்காமல், அவர்கள் அவதிப்படாமல் இருப்பதற்கு அவர்களை முதலில் வேலையில் அமர்த்துவதற்கு அரசாங்கம் ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தற்பொழுது கல்வி அதிகாரிகளுக்குத் தெரிவிக்கப்பட்டிருக்கிற கருத்தின்படி இப்படி வயது ஆகி, பிறகு வேறு வேலை பெறமுடியாமல் போகின்ற சூழ்நிலையில் இருப்பவர்களுக்கு முதல் சலுகை தந்து, அவர் களுக்கு வேலை வாய்ப்புத் தரவேண்டும். எங்கேயாவது இதுமாதிரி இடர்ப்பாடு இருக்குமேயானால், அது தனியாகக் கவனிக்கப்பட வேண்டும் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது.